**தலைப்பு 310 – அரசாங்க தொழிற்சாலை திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரசாங்க தொழிற்சாலை திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசாங்க தொழிற்சாலை திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 05 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க தொழிற்சாலை திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என்றும்.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **வருடாந்த நிதிக் கூற்றுக்கள்**<br>அரசாங்க கணக்குகள் திணைக்களத் தினால் வழங்கப்பட்டுள்ள 06 ஆம் இலக்க வழிகாட்டலின் பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் 2021 பெப்ரவரி 28 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அது 2021 மார்ச் 17 ஆந் திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2021 பெப்ரவரி 18 ஆந் திகதியன்று கணக்காய் வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், அவற்றில் காணப்பட்ட சில குறைபாடுகள் திருத்தப்பட வேண்டி ஏற்பட்டமையால் அவை திருத்தப்பட்டு அது 2021.03.17 ஆந் திகதி மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டது. | அரசாங்க கணக்கு கள் திணைக்களத் தினால் வழங்கப்பட் டுள்ள வழிகாட்டலின் பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

**1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று**

**வருமானமற்ற பெறுவனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒன்றிணைந்த பரீட்சை மீதியில் காட்டப்பட்டவாறு திறைசேரியிடமிருந்து கிடைத்திருந்த கட்டுநிதித் தொகை ரூபா 247,001,944 ஆன போதிலும், நிதிச் செயலாற்றல் கூற்றில் அத்தொகை ரூபா 248,268,319 எனக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 1,266,375 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | ரூபா 1,266,375 வேறுபாடு முன்னைய ஆண்டின் தீர்க்கப்படாத முற்பணங்கள் ஆவதுடன், அவை இந்த ஆண்டில் (2020) தீர்க்கப்பட வேண்டும் என்பதனால் இந்தப் பெறுமதி நிதிச் செயலாற்றல் கூற்றிலுள்ள திறைசேரி கட்டுநிதிக் கணக்கிற்கு கூட்டப்பட்டு நிதிச் செயலாற்றல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை தெரியப்படுத்துகின்றேன். | ஆண்டின் போதான பெறுவனவுகள் குறித்த ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுதல் வேண்டும். |

**1.6.3 நிதி நிலைமைக் கூற்று**

**ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி அல்லாத சொத்துக்கள் கணக்கு மீதிக்கும் நிதி அல்லாத சொத்துக்கள் ஒதுக்கங்கள் கணக்கு மீதிக்கும் இடையே ரூபா 277,700 வேறுபாடு காணப்பட்டது. | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிதி அல்லாத சொத்துக்கள் கணக்கு மீதிக்கும் நிதி அல்லாத சொத்துக்கள் ஒதுக்கங்கள் கணக்கு மீதிக்கும் இடையிலான வேறுபாட்டுக்கான காரணம் தீர்க்கப்படாத முற்பணமாக காட்டப்பட்டுள்ள ரூபா 277,700/- ஆகும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | நிதி அல்லாத சொத்துக்களின் ஒதுக்கக் கணக்கிற்கு தீர்க்கப்படாத கட்டுநிதி மீதியை சீராக்குதல் கூடாது. |

1.6.4 **முற்பணங்கள் கணக்கு மீதி**

முற்பணங்கள் கணக்குகளிலுள்ள ஆண்டிறுதி மீதிகளை பதிவுசெய்கையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் ஒருங்கிணைந்த பரீட்சை மீதியிலுள்ள முற்பணங்களின் அறவீடு ரூபா 383,323,827 ஆன போதிலும், காசுப் பாய்ச்சல் கூற்றில் அப்பெறுமதி ரூபா 381,737,747 ஆனமையால் ரூபா 1,586,080 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் காசுப் பாய்ச்சல் கூற்றை சமர்ப்பிக்கையில் அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் சரியான மீதியை காட்டுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்தின் ஒருங்கிணைந்த பரீட்சை மீதியிலுள்ள முற்பணங்களின் கொடுப்பனவு ரூபா 265,424,450 ஆன போதிலும், காசுப் பாய்ச்சல் கூற்றில் அப்பெறுமதி ரூபா 264,333,657 ஆனமையால் ரூபா 1,090,795 வேறுபாடு காணப்பட்டது. | எதிர்காலத்தில் காசுப் பாய்ச்சல் கூற்றை சமர்ப்பிக்கையில் அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | SA – 52 படிவத்தில் காட்டப்பட்டுள்ள முற்பணப் பெறுவனவு மீதிகளிற்கும் நிதிச் செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டுள்ள முற்பணப் பெறுவனவு மீதிகளிற்கும் இடையே ரூபா 1,009,579 வேறுபாடு காணப்பட்டது. | எதிர்காலத்தில் கணக்குகளைத் தயாரிக்கையில் இதனைத் திருத்திச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாடுகளை இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் உரிய சீராக்கம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | SA – 52 படிவத்தில் காட்டப்பட்டுள்ள முற்பணக் கொடுப்பனவு மீதிகளிற்கும் நிதிச் செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டுள்ள முற்ப ணக் கொடுப்பனவு மீதிகளிற்கும் இடையே ரூபா 1,586,080 வேறுபாடு காணப்பட்டது. | எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிதிச் செயலாற்றல் கூற்றில் இதனைத் திருத்திச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

1.6.5 **கட்டுநிதி சீராக்கல் கணக்கு**

பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | SA – 52 படிவத்திற்கும் நிதிச் செயலாற்றல் கூற்றிலுள்ள முற்பண அறவிடுதல்களுக்கும் இடையே காணப்பட்ட வேறுபாடான ரூபா 576,501 கட்டுநிதி சீராக்கல் கணக்கில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கட்டுநிதி சீராக்கல் கணக்கை சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகளிற்கு இடையிலான வேறுபாடுகள் கட்டுநிதி சீராக்கல் கணக்கில் சீராக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | SA – 52 படிவத்தின் படி நிதிச் செயலாற்றல் கூற்றிலும் காசுப் பாய்ச்சல் கூற்றிலும் உள்ள முற்பண கொடுப்பனவுகளிற்கு இடையே காணப்படும் வேறுபாடான ரூபா 495,287 கட்டுநிதி சீராக்கல் கணக்கில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்கல் கணக்கை தயாரிக்கையில் இதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

### 1.6.6 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்பட்டுள்ள சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் மேலும் சில பதிவேடுகள் முறையாகவும் நாளது வரையாகவும் பேணப்பட்டிருக்காமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களது தகவல்களை உள்ள டக்கிய பிணை வைப்பு பதிவேடு தயாரிக்கப்பட் டிருக்கவில்லை. | பிணை வைப்பு பதிவேடு பேணுவதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட் டுள்ளன. | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களின் உள்ளடக்கிய பிணை வைப்பு பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |
| (ஆ) | பொறுப்புக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணப் பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் எந்தவொரு பொறுப்பும் ஏற்படவில்லை என்பதனால் பதிவுகள் செய்யப்படாததுடன், இந்த ஆண்டு முதல் பொறுப்புக்கள் ஏற்பட்டால் பதிவேட்டில் உள்ளடக்கவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |

### 1.6.7 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுடன் சம்பந்தப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 55,087,507 கடன்பட்டோரு க்கான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த தொகை 2015 இற்கு முன்னர் கணக்குகள் பிரிவிற்கும் வேலைகள் பிரிவிற்கும் இடையிலான கடன்பட்டோர் மீதி கணக்கிணக்கத்தின் படி பதிவழிக் கப்பட வேண்டிய மீதியாகும். அந்த மீதி ரூபா 85,284,890.01 ஆகும். கணக்கா ய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டத்தில் ரூபா 30,197,395.11 மீதியை பதிவழிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டமையால் அந்த மீதி புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டது. பதிவழித்த பின்னர் எஞ்சியுள்ள மீதி ரூபா 55,087,494.90 ஆகும். | மீதிகளை உறுதிப்படு த்துவதற்காக அனை த்து கடன்பட்டோ ரினதும் பட்டோலை கள் சமர்ப்பிக்கப்ப டுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1995 முதல் 2011 வரை அறவிடப்பட வேண்டியுள்ள கடன்பட்டோர் மீதியான ரூபா **138,239,822** தொகையில் கடந்த 11 ஆண்டுகளில் எவ்விதத் தொகையும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | 1997 முதல் 2007 வரையான கடன் மீதிகளை அறவிட முடியாத கடன் கணக்கின் மூலம் உரிய சீராக்கங்களை மேற்கொள்வதற்கு பரிந்துரை கிடைத்துள்ளது. 2008 முதல் 2015 வரையான கடன்பட்டோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2015 முதல் இது வரையான கடன்கள் தொடர்பில் குறித்த நிறுவனங்களிற்கு கடிதங்கள் அனுப்பப்படுகின்றன. | ஆறவிடப்பட வேண்டியுள்ள கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.2 எல்லைகளை அடைந்திருக்காமை

அரசாங்க முற்பண நடவடிக்கைகளிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகளை அடைந்திருக்காமை தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| களஞ்சிய முற்பணங்கள் மற்றும் செய்த வேலைகளின் முற்பண கணக்கு பெறுவனவுகளினதும் ஆகக்குறைந்த செலவுகளினதும் அங்கீகரித்த எல்லைகள் முறையே ரூபா **120,000,000** மற்றும் ரூபா **420,000,000** ஆன போதிலும், உள்ளபடியான பெறுமதிகள் ரூபா **56,087,363** மற்றும் ரூபா **305,040,431** ஆகக் காணப்பட்டமையால் மீளாய்வாண்டில் திணைக்களத்திற்கு அந்த எல்லைகளை அடைய முடிந்திருக்கவில்லை. | கோவிட் - 19 இன் முதலாவது மற்றும் இரண்டாவது அலை காரணமாக எமது திணைக்களம் ஏறத்தாழ 05 மாதங்கள் மூடப்பட்டிருந்தது. அவ்வாறே, பிரயாணக் கட்டுப்பாடுகள் காரணமாக தொழிலாளர்கள் வேலைத்தளங்களிற்கு வருகை தராமையால் திட்டமிடப்பட்டவாறு செயற்திட்டங்களை பூரணப்படுத்த முடியவில்லை. ஆகையால் பெறுவனவுகளின் ஆகக் குறைந்த எல்லையை அடைய முடிந்திருக்கவில்லை. | எல்லைகளுடன் இணங்கி ஒழுகுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் களஞ்சிய முங்பணக் கணக்குகளுடன் தொடர்புடைய ரூபா **1,141,584** பெறுமதியான தீர்க்கப்படாத கடன்கொடுத்தோர் மீதியொன்று காணப்பட்டது. அதில் ரூபா **324,021** தொகை 02 முதல் 05 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட மீதியாகும். | கடன்கொடுத்தோர் மீதியாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ள தொகையை எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க ப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | பொறுப்புக்களை உரிய வாறு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.4 செய்யப்பட்ட வேலை முற்பணங்கள் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செய்யப்பட்ட வேலை முற்பணங்கள் கணக்கில் 1995 முதல் 2011 வரை அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 138,239,822 கடன்பட்டோர் மீதியில் கடந்த 10 ஆண்டுகளில் எவ்விதத் தொகையும் அறவிடப்பட்டிருக்கவி ல்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டி யுள்ள கடன்பட்டோர் மீதியை அறவிடுவ தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.5 அரசாங்க உத்தியோகத்தர் முற்பணங்கள் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ)** மாகாண சபைகளிற்கு இடமா ற்றம் பெற்றுச்சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து 2 ஆண்டுகளிற்கும் மேலாக ரூபா 466,400 மீதி அறவிடப்பட்டிருக்க வில்லை. | பதிலளிக்கப்பட்டிருக் கவில்லை. | நிலுவைக் கடன் மிதிகளை அறவிடு வதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** கோவைகள் காணாமல் போன மையால் ரூபா 32,630 கடன் மீதியை அறவிட முடியாது போயிருந்ததுடன், அதனுடன் சம்பந்தப்பட்ட பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | -மேற்படி. | நிதிப் பிரமாணம் 156(6) இன் படி அனைத்து ஆவண ங்கள், புத்தகங் கள், அறிக்கைகள் மற்றும் பதிவேடுகள் |

| | | |
|---|---|---|
| | | போன்றவற்றை உரிய விதத்தில் அகற்றும் வரை முறையாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருத்தல் வேண்டும். |

**2.6 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் செய்யப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அரசாங்க தொழிற் சாலை திணைக்களத்தின் நிதி நிர்வாகத்திற்கான ஆக்கபூர்வமான உள்ளக நிர்வாக முறைமை யொன்று தயாரித்து பேணப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியுள்ளதுடன் அம் முறைமையின் ஆக்கபூர்வத் தன்மையினை காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன்படி முறைமையை ஆக்கபூர்வமாக பேணிச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டியதுடன் அம்மீளாய்வுகளின் எழுத்து மூலமான பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தும் அவ்வாறு மீளாய்வு செய்யப்ப ட்டதுக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக நிர்வாகம் தொடர்பான கோவை இலக்கத்தை சமர்ப்பி த்தல், இடமாற்றங்களின் போது கோவைகளை கையளித்தல் போன்ற உள்ளக நிர்வாக முறைகள் தற்போது அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. அதனுடன் தொடர்புடைய மாற்றங்களின் மீளாய்வு ஒவ்வொரு ஆண்டிலும் செய்யப்படாததுடன், எதிர் காலத்தில் இதனை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். வேலைத் தளங்களின் செயற்பாடுகளிற்காக வழிமுறை கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான பொழிப்பொன்று சமர்ப்பிக்கப்பட வில்லை. எதிர்காலத்தில் இதனை தவிர்ப்பதற்கு நடவடி க்கை எடுக்கப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்க மைய நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |

**2.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டதிட்ட மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு** | **இணக்கமின்மை** | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை யின் | ஓய்வுபெற்று / மரணித்து 04 வருடங்களைத் தாண்டிய ஏழு | ஓய்வுபெற்று அல்லது மரணித்து 04 | தாபன விதிக் கோவையின் பிராகரம் நடவடி |

| | | | | |
|---|---|---|---|---|
| | xxiv ஆம் அத்தி யாயத்தின் 4.2.5 ஆம் பந்தி | உத்தியோகத்தர்களிடமி ருந்து அறவிடப்பட வேண் டிய ரூபா 446,305 கடன் மீதி அறவிடப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வருடங்களைத் தாண்டியுள்ளமை. | க்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் கோவையின் 156(6) ஆம் நிதிப்பிமாணம் | கணக்குகளுடன் தொடர்பு டைய அனைத்து ஆவண ங்கள், புத்தகங்கள், அறிக் கைகள் மற்றும் பதிவேடு கள் போன்றவற்றை பொறுப் புவாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரின் / உத்தியோகத்தர் களின் பொறுப்பில் பாதுகாப் பாக வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கா மையால் கடன் மீதிகளை அறவிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. | குறித்த கோவை கள் காணாமல் போனமையுடன் சம்பந்தப்பட்ட பொறுப்புவாய்நத உத்தியோகத்தர்க ளை கண்டறிவத ற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது | நிதிப் பிரமாணங் களின் படி நடவ டிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந் து அறவிடப்பட வேண்டிய ரூபா 382,400 கடன் மீதியை குறித்த உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்றுச் சென்ற அலுவலகத்திலிருந்து ஒரே தடைவயில் அறவிட வேண் டிய போதிலும், உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு இடமாற் றம் பெற்றுச்சென்ற உத்தி யோகத்தர்களிடமிருந்து அக் கடன்கள் தவணை அடிப்ப டையில் அறவிடப்படுகின் றமை அவதானிக்கப்பட்டது. | உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு இடமாற்றம் பெற்று ச்சென்ற இரண்டு உத்தியோகத்தர்க ளிடமிருந்து அறவி டப்பட வேண்டிய ரூபா 382,400 கடன் மீதியை அற விடுதல் தொடர் பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை பிரகாரம் நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேசிய கொள்வனவு முகவர் நிலையத்தின் சுற்றறிக்கை மற்றும் 2006 இன் அரசாங்க கொள்வ னவு வழிகாட்டல்கள் கோவை | | | |
| | 8.9.1 (ஆ) வழிகாட்டல் | ரூபா 500,000 இனை விஞ்சிய பொருள் வழங்கல் ஒப்பந்தங்களிற்காக முறை யான உடன்படிக்கை ஒன் றில் கைச்சாத்திட வேண்டிய போதிலும், அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கவில்லை. | கணக்காய்வு ஐய வினாவில் சுட்டிக் காட்டப்படவாறு மிகச் சரியான விதத்திலும் முறை யாகவும் தவறுகளி ன்றி ரூபா 500,000 இனை | 08 ஆம் இலக்க தேசிய கொள்வ னவு முகவர் நிலையத்தின் சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுத்தல் வேண் டும். |

| | | |
|---|---|---|
| | | விஞ்சிய பொருள் வழங்கல் ஒப்பந்தங்களிற்காக முறையான உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.8 வைப்பு மீதிகள்**

வைப்பு மீதிகள் தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாதுள்ள ரூபா **505,600** தொகையான கேள்விப்பண வைப்புக்கள் காணப்பட்டன. | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாதுள்ள கேள்விப்பண வைப்புக்கள் தொடர்பில் குறித்த நிறுவனங்களிற்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அதனை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாதுள்ள கேள்விப்பண வைப்புகளை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைத்தல் வேண்டும். |
| (ஆ) தற்காலிகமாக பிடித்து வைத்துள்ள வைப்புக் கணக்கிலுள்ள இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாதுள்ள மீதி ரூபா **508,570** ஆகும். | குறித்த நிறுவனங் களிற்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அதனை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக் கைகள் எடுக்கப்பட்டு வருகின் றன. | தீர்க்கப்பட வேண்டிய மீதிகளை கண்டறிந்து அதனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாடுகளை நிறைவேற்றியிருக்காமை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தபால் திணைக்களத்தின் போக்கு வரத்து பிரிவிற்கு தற்காலிக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற் காக 2020 மார்ச் 06 ஆந் திகதி ரூபா **22,199,572** செலுத்தியி ருந்த போதிலும், 2021 பெப்ரவரி 06 | இதனுடன் தொடர்புடைய சிவில் பொறியியல் வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இயந்திர வியல் பொறியியல் பணிகளுடன் தொடர்புடைய திட்டங்கள் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தி னால் வழங்கப்பட வேண்டியுள்ள | செயற்திட்டங்களை உரிய காலத்தில் ஆரம்பிப்பதற்கும் உரிய செயலாற்றலை அடைந்து கொள்வதற்கும் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| ஆந் திகதிய கணக்காய்வுத் திகதி வரை எவ்வித பௌதீக செயன் முன்னேற்றமும் காணப்பட வில்லை. | மையால் அந்த திட்டங்கள் வழங்கப்பட்டவுடன் வேலைகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள் ளது. | எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ)** மீளாய்வாண்டில் பூரணப்படுத் துவதற்கு உத்தேசிக்கப்பட்டிரு ந்த ரூபா 1 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயம் கொண்ட திணைக்களத்தின் பழைய இரும்புக் கூடாரத்தின் II ஆவது உப கூடார நிர்மாணச் செயற்திட்டத்தின் பௌதீக செயல் முன்னேற்றம் ஏறத்தாழ 10 சதவீதமாக காணப்பட்டது. | பழைய இரும்புக் கூடாரத்தின் II ஆவது உப கூடார நிர்மாணத் துடன் தொடர்புடைய பொறியி யல் வேலைகள் தற்போது முடிவடைந்துள்ளதுடன், எஞ்சிய வேலைகளிற்கான மூலப்பொ ருட்கள் கொள்வனவு செய்யப்ப ட்டுள்ளன. இந்தப் பணியை துரிதமாக முடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | செயற்திட்டங்களை உரிய காலத்தில் ஆரம்பிப்பதற்கும் உரிய செயலாற்றலை அடைந்து கொள்வத ற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** குடாஓய லுனுகம்வெஹர தேசிய பூங்காவிற்குள் நுழைகின்ற இரும்புப் பாலத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு ரூபா 60 மில்லியனானதுடன், **2020** திசெம்பர் 31 வரை இதன் பௌதீக செயல் முன்னேற்றம் ஏறத்தாழ 10 சதவீதமாக காணப்பட்டது. | மூலப்பொருட்களில் ஏறத்தாழ 90 சதவீதம் தற்போது கொள்வ னவு செய்யப்பட்டுள்ளதுடன், திட்டங்களும் வடிவமைப்பும் பூரணப்படுத்தப்பட்டுள்ளது. கிரய மதிப்பீடுகளில் சில திருத்தங்க ளைச் செய்த பின்னர் மீண்டும் வேள்வி கோரலை மேற் கொள்ள வேண்டியிருந்ததுடன், அந்த விலை வேறுபாடுகளிற்கு அமைய திருத்திய மதிப்பீட்டிற்கு அங்கீகாரம் கிடைத்தவுடன், அந்தப் பொருட்களை வரவழை த்து பணிகளை ஆரம்பிதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டங்களை உரிய காலத்தில் ஆரம்பிப்பதற்கும் உரிய செயலாற்றலை அடைந்து கொள்வத ற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள 14 ஆம் வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கு அமைவாக வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

---------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(ஆ)** குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்<br>பின்வரும் காணிகள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | | |
| (i) ஊடைத்து அகற்றப்பட்ட பழைய 07 ஆம் இலக்க வேலைத்தளம் அமைந்துள்ள காணி | இந்த இடத்தில் வாகனங்களை சேவை செய்யும் நிலைய மொன்றை ஸ்தாபிப்பதற்கு திட்ட மிடப்பட்டு அதற்காக செயற்திட்ட அறிக்கையொன்று தயாரிக்கப்பட் டதுடன், அதற்கு அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.<br>எதிர்காலத் தில் இந்த இடத்தில் வாகன நிறுத்தகம் ஒன்றை நிர்மாணிப்ப தற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை இனங்கண்டு அவற்றை பயன் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) மெந்திஸ்வத்த 03 ஊழியர் விடுதிகள் அமைந்துள்ள 01 ஏக்கர் 03 ரூட் 11 பேர்ச் காணியின் எஞ்சிய பிரதேசம் | இந்தக் காணியின் அளவு Turning Circle உள்ளிட்ட வீதியையும் பழைய 03 விடுதிகளையும் கொண்டிருப்பதுடன் விடுதிகளிற்குத் தேவையான வசதிகள் இதன் மூலம் வழங்கப்படுகின்றது. | -மேற்படி- |
| (iii) 01 ரூட் **08.87** பேர்ச் விஸ்தீரணமுள்ள பீப்பாய் கூடம் | பீப்பாய் கூடம் அமைந்துள்ள காணி தற்போது பாதுகாப்பு பிரிவிற்கு தங்குமிட வசதி வழங்குவதற்காக தற்காலிக கூடமொன்றை நிர்மாணிப்பதற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், எதிர்கால த்தில் அரசாங்க தொழிற்சாலை யால் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள புகையிரத பெட்டிகளை திருத்த வேலைகளி ற்கான வேலைத்தளம் ஒன்றை இந்த இடத்தில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டு வருகின்றது. | -மேற்படி- |
| (iv) பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத மூன்று வகையான இயந்திர உபகரணங்கள் | Straight Machine – சரியாக நிறுவப்பட்டிருக்காமையால் இனங்காண்பது முடியாதுள்ளது. இந்த இயந்திரம் அவ்வப்போது வேலைகளிற்காக பயன்படுத்தப்படு கின்றது. மேலும், Burner - இந்த இயந்திரத்தை சரியாக இனங்காண முடியாதுள்ளது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | | அவ்வாறே Power Hack Saw Machine - இந்த இயந்திரத்தை சரியாக இனங்காண முடியாதுள்ளது.<br>இந்த பழைய இயந்திர உபகரணங்களை ஏலமிடுவதற்கு திட்மிடப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (v) | திணைக்களத்திற்கு உரிய 06 உத்தியோகபூர்வ விடுதிகள் கையளிக்கப்படாது குறைப் பயன்பாட்டில் காணப்பட்டது. | திணைக்களத்திற்கு உரிய 06 உத்தியோகபூர்வ விடுதிகள் கையளிக்கப்படாமைக்கான காரணம் அவற்றிற்கு உத்தியோக த்தர்களிடமிருந்து கோரிக்கை கிடைக்காமையாகும். | |
| (ஆ) | எல்லை மதில் அல்லது நிரந்தர வேலி அமைத்து திணைக்களத்திற்குச் சொந்த மான காணிகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமையால் அரசாங்க தொழிற்சாலையின் ஊழியர்களது வீடுகள் அமைந்துள்ள காணியில் எஞ்சியுள்ள பகுதியான 01 ஏக்கர் 03 ரூட் 11 பேர்ச் காணி அத்துமீறிய குடியிருப்பாளர்களால் அபகரிக்கப்பட்டிருந்தது. | இந்தக் காணியில் 07 ஏக்கர் 01 ரூட் 38 பேர்ச் காணி 2011 ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப் படுகையில் எஞ்சிய பகுதி அத்துமீறிய குடியிருப்பாளர்களால் அபகரிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுக்கும்படி நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | திணைக்களத்திற்குச் சொந்தமான பின்வரும் 03 காணிகளிற்கான உறுதிகள் திணைக்களத்திடம் காணப்ப டாததுடன் நில அளவையாளரின் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பிரதேச செயலாளர் ஊடாக உரித்தினை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வேலைக்கான நில அளவையாளர் திட்டத்தை வரை தல் நில அளவையாளர் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப் பட்டுள்ளதுடன், விலை மதிப்பீட்டிற் காக விலை மதிப்பீட்டுத் திணைக் களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | உரித்தினை உறுதிப்படுத்து வதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | திணைக்களத்திற்குச் சொந்தமான 14 அரசாங்க விடுதிகள் அவை பெற்றுக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களால் வெளித் தரப்பினர்களிற்கு வாடகை அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டிருந்தன. | உத்தியோகத்தர்களால் வெளித் தரப்பினர்களிற்கு சட்டரீதியற்ற முறையில் வாடகை அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டுள்ள விடுதிகளை மீண்டும் திணைக்களத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கை யின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | ரூபா **2,382,546** பெறுமதியான தகரங்கள், உலோகங்கள் மற்றும் இறக்குமதிப் பொருட்கள் எவ்வித பயன்பாட்டிற்கும் உற்பத்தி நடவடிக்கை க்கும் எடுக்கப்படாது வளவில் வைக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்ப ட்டது. | இந்தப் பொருட்கள் சந்தையில் எளிதாகக் கிடைக்கக் கூடிய பொருட்கள் அல்ல என்பதனால் அநேகமானவை இறக்குமதி செய்யப்பட்டவையாகும்.<br>நீர்ப்பாசன செயற்திட்டங்களின் அவசர திருத்த ங்களிற்காக இவற்றில் அநேகமா னவை | மூலப்பொருட்க ளையும் உதிரி ப்பாகங்களை யும் உச்ச அளவில் பயன் படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பயன்படுத்தப்படுவதுடன், அந்த சந்தர்ப்பங்களில் அவற்றை துரிதமாக திருத்தப்பட வேண்டியுள் ளமையால் அந்த பொருட்கள் பிரதான களஞ்சியத்தில் வைக்கப்ப ட்டுள்ளன. | |
| (ஊ) | திணைக்களத்திற்குச் சொந்தமான 06 வாகனங்கள் மீளாய்வாண்டில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாத போதிலும், அதற்காக ரூபா ரூபா **105,717** செலவு செய்யப்பட்டுள்ளது. | திணைக்களத்திற்குச் சொந்தமான சில வாகனங்களிற்கு பாரிய திருத்தங்கள் செய்யப்பட வேண்டி உள்ளமையால் அந்த வாகனங் களை திருத்துவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் அங்கீகரித்த பதவிய ணியினரின் எண்ணிக்கை 770 ஆனதுடன் உள்ளபடியான எண்ணிக்கை 412 ஆகும். அதன்படி 358 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்காக அரசாங்க சேவைகள் அமைச் சிற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள் ளதுடன் அந்த வெற்றிடங்கள் அந்த அமைச்சின் PACIS முறைமைக்கு மாதந்தோறும் இணையவழி மூலம் நாளதுவரையாக்கப்படுகின்றது. | திணைக்களத்தா ல் அத்தியாவ சிய வெற்றிடங் களை நிரப்புவத ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண் டும். |